# மார்ச் - 13- திங்கள்

## தூய ரிக்ஸி கத்தரின்

## பிறர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்காதீர்கள் நீங்களும் தீர்ப்புக்குள்ளாக மாட்டீர்கள்'' (லூக். 6:37)

---

## முதல் வாசகம்: தானியேல் 9 : 4 - 10

என் கடவுளாகிய ஆண்டவர்முன் என் பாவங்களை அறிக்கையிட்டு நான் மன்றாடியது: "என் தலைவரே! நீர் மாட்சிமிக்கஇ அஞ்சுதற்குரிய இறைவன். உம்மீது அன்புகொண்டு உம் கட்டளைகளின்படி நடப்பவர்களுடன் நீர் செய்துகொண்ட உடன்படிக்கையைக் காத்து அவர்களுக்குப் பேரன்பு காட்டுகின்றீர்! நாங்கள் பாவம் செய்தோம் வழி தவறி நடந்தோம் பொல்லாத வர்களாய் வாழ்ந்து உம்மை எதிர்த்து நின்றோம். உம் கட்டளைகளையும் நீதிநெறிகளையும் கைவிட்டோம். எங்களுடைய அரசர்கள் தலைவர்கள், தந்தையர்கள், நாட்டிலுள்ள மக்கள் அனைவர்க்கும் இறைவாக்கினர்களாகிய உம் ஊழியர்கள் உமது பெயரால் பேசியதற்கு நாங்கள் செவி கொடுக்கவில்லை. என் தலைவரே! நீதி உமக்கு உரியது. எமக்கோ இன்று வரை கிடைத்துள்ளது அவமானமே. ஏனெனில், யூதாவின் ஆண்களும் எருசலேம் வாழ் மக்களும், இஸ்ரயேலைச் சார்ந்த யாவரும் ஆகிய நாங்கள், உமக்கு எதிராகச் செய்த துரோகத்தின் பொருட்டு, அருகிலோ தொலையிலோ உள்ள எல்லா நாடுகளுக்கும் உம்மால் இன்றுவரை விரட்டப்பட்டுள்ளோம். ஆம், ஆண்டவரே! அவமானமே எங்களுக்கும் எங்கள் அரசர்களுக்கும், தலைவர்களுக்கும், தந்தையர்களுக்கும் கிடைத்துள்ளது. ஏனெனில், நாங்கள் உமக்கு எதிராகப் பாவம் செய்தோம். எங்கள் தலைவரும் கடவுளுமாகிய உம்மிடத்தில் இரக்கமும் மன்னிப்பும் உண்டு. நாங்களோ உம்மை எதிர்த்து நின்றோம். எங்கள் கடவுளாகிய ஆண்டவர் தம் ஊழியர்களான இறைவாக்கினர் மூலம் தம் திருச்சட்டங்களை அளித்து அவற்றின் வழியில் நடக்குமாறு பணித்தார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே! எம் பாவங்களுக்கு ஏற்றபடி எம்மை நடத்தாதேயும்

## நற்செய்தி : லூக்கா 6 : 36 – 38

அந்நாட்களில் இயேசு கூறியதாவது: உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள். "பிறர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்காதீர்கள் அப்போதுதான் நீங்களும் தீர்ப்புக்குள்ளாக மாட்டீர்கள். மற்றவர்களைக் கண்டனம் செய்யாதீர்கள் அப்போதுதான் நீங்களும் கண்டனத்துக்கு ஆளாக மாட்டீர்கள். மன்னியுங்கள் மன்னிப்புப் பெறுவீர்கள். கொடுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும் அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள். நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்." என்றார்.

**தியானம்:** இவ் இறைவார்த்தை வசனம் எங்கள் ஒவ்வொருவரையும் சிந்திக்க அழைத்து நிற்கின்றது. ஏனென்றால் நாங்கள் மற்றவர்களுக்குத் தீர்ப்பளித்து வாழும் வாழ்க்கையானது இறைவனுக்கு விருப்பமற்ற தொன்றாகும். இங்கு தீர்ப்பளிக்காதீர்கள் என்ற வார்த்தையைப் பார்போமானால் அன்பானது மறைமுகமாக வெளிப்படுத்தப்படுகின்றது. அன்பு எம் ஒவ்வொருவர் மத்தியில் காணப்படும் பொழுது ஒருபோதும் மற்றவர்களுக்கு தீர்ப்பிடுவது, சாபமிடுவது போன்ற துர்க்குணங்கள் காணப்பட மாட்டாது. மாறாக இவ்வாறான துர்க்குணங்கள் எம்மிடம் காணப்படுமாயின் இவற்றிலிருந்து விடுபட எம்மத்தியில் அன்பு, பகிர்வு, மன்னிப்பு என்பன அவசியமான தொன்றாகும். ஆனால் இவ்வாறானவை எம்மத்தியில் அரிதாகவே காணப்படுகின்றது. எமது குடும்பத்தில், அயலவர்கள் மத்தியில், வேலை செய்யும் இடங்களில் ஏற்படும் சிறு சிறு மனக்கசப்புக்களை பெரிதாக்கி அவர்கள் செய்யாததொன்றை செய்ததாக அவர்களது மனங்களை நோகடித்து இவ்வாறு பலவகைகளில் தண்டித்து தீர்ப்பளித்து விடுகின்றோம். ஆனால் இவ்வாறு மற்றவர்களைத் தணடிப்பதற்கு நாங்கள் யார்? இவ்வாறு தண்டிக்கும் பொழுது யாரை நோகடிக்கின்றோம்? என்பதை மறந்து விடுகின்றோம். எனவே யாவற்றையும் உணர்ந்தவர்களாக மற்றவர்களைத் தீர்ப்பிடாமல் அன்புடனும், ஒற்றுமையுடனும் ஒருவரை ஒருவர் ஏற்றுவாழ்வோம்.